## ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்திம் (ஐவீதி) - 2014

ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் (ஐவீதி) 2014 நவம்பர் 01 தொடக்கம் 2014 திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும்மிடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 05 ஆம் திகதிய 3171 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசி யலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அமுலாக்கும் முகவராகவும் உள்ளன. கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களிற்கிடையில் வீதி அணுகுமுறையை விரிவுபடுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். முன்னேற்றமடைந்த இணைப்பு நீண்ட கால பின்விளைவாக இருப்பதுடன் தேசிய மற்றும் மாகாண வீதிகளின் வினைத்திறனான அதிகரித்த போக்குவரத்து என்பதே வெளியீடாகும். இந்த முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2,200 கிலோ மீற்றர் மாகாண வீதிகள் மற்றும் 400 கிலோ மீற்றர்கள் தேசிய வீதிகள் என்பவற்றை உள்ளடக்கி தென்மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், மேல் மாகாணம், மத்திய மாகாணம், வடமத்திய மாகாணம், வடமேல் மாகாணம், என்பவற்றில் நிறுவப்பட்ட ஐந்து செயற்திட்ட அமுலாக்கல் கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. கடன் உடன்படிக்கையின்படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக்கிரயம் ரூபா 117,780 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 906,மில்லியனானதுடன் அதில் ரூபா 104,000 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 800 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 யூன் 01 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2024 மார்ச் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர்,

ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்ளிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்க

(அ) நிகழ்ச்சித்திட்டம் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) தேசிய கொள்வனவு வழிகாட்டிகள் | |
| பிரிவுகள் 3.1 மற்றும் 3.2 | ரூபா 119,266,514 கூட்டு மொத்தத் தொகை மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வீதிகளின் ஆரம்ப விசாரணைகளிற்கான 11 உசாத்துணையாளர்களைத் தெரிவு செய்வதற்கு போட்டிக் கேள்வி நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை. |
| பிரிவு 1.2 (இ) | கொள்வனவுகளில் தகுதிவாய்ந்த அக்கறையுள்ள தரப்பினருக்கு நியாயமான சமனான மற்றும் அதிஉச்ச சந்தர்ப்பங்களை வழங்குவதற்காக கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட வேண்டுமென்ற போதிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட வாடகை வாகன வழங்குனர்களை செயற்திட்டம் தெரிவு செய்திருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க சுற்றுநிரூபம் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 22 உத்தியோகத்தர்களை நிகழ்ச்சித்திட்டம் நியமித்திருந்தது. |

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பவை தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்க உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் |
|---|---|---|---|---|
| | ஐ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 800 | 104,000 | - | - |
| ஜீஓஎஸ்எல் | 106 | 13,780 | 30.79 | 29.10 |
| மொத்தம் | 906 | 117,780 | 30.79 | 29.10 |

நிதி உடன்படிக்கையின் படி, பொதுத் திறைசேரியால் கிடைக்கச் செய்யப்பட்ட ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக, 2014 யூன் 01 ஆம் திகதியிலிருந்து நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான தற்காலிக கடனாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து ரூபா 136 மில்லியன் தொகை பெறுகைகள் கிடைத்திருந்தன.

### 3.2 பௌதிக செயலாற்றல்

வீதி தயார்படுத்தும் நடவடிக்கைகளிற்கான உசாத்துணை வேலைகள் தவிர்ந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய வீதி முன்னேற்ற நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.